

# “இளைஞர்கள் அறிவாயுதம் ஏந்த வேண்டும்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற முற்போக்கு புத்தகக் காட்சி நிகழ்வில் ‘இளம் தலைமுறையே, அரசியல் பழகலாம் வா’ என்ற தலைப்பில், கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி அவர்கள் ஆற்றிய உரை :**

“வரலாற்றுச் சிறப்புமிக்க திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் சார்பாக, இதுவரை தமிழ்நாட்டில் வேறு எந்த அமைப்பும் நடத்தாத ஒரு புதிய முற்போக்கு புத்தகக் காட்சி நடைபெறுகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு, 75 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்கும் சூழலில், முற்போக்கு புத்தகங்கள் மட்டும் இடம்பெற்றிருக்கும் ஒரு மாபெரும் புத்தகக் காட்சி இது.

மற்ற எல்லாவற்றையும் நாம் பழகலாம். அரசியலைப் பழகுவதற்கு என்று தனியாக நிறுவனம் கிடையாது. சைக்கிள் பழகலாம், நீச்சல் பழகலாம், டைப் ரைட்டிங் பழகலாம், சட்டம் படித்தவர்கள் ஜூனியராக வேலை செய்து வழக்கறிஞர் தொழில் பழகலாம். ஆனால், அரசியல் பழகுவதற்கு வேறு எந்த இடமும் கிடையாது. அதை நாம் வாழ்க்கையில் இருந்துதான் பழக வேண்டும்.

‘மாரியம்மன் திருவிழா’, ‘காளி அம்மன் திருவிழா’, ‘பொங்கல் திருவிழா’, ‘தீபாவளி திருவிழா’, ‘சித்திரைத் திருவிழா’ என்று ஏராளமான திருவிழாக்கள் இருக்கின்றன. எத்தனை திருவிழாக்கள் இருந்தாலும், அறிவுக்கு ஒரு திருவிழா எடுக்கக்கூடிய ஆற்றல் ஒரு இயக்கத்துக்கு இருக்கிறது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத்தான்.

### கேட்கக்கூடாத கேள்வி

நீங்கள் யாரை வேண்டுமானாலும், என்ன கேள்வி வேண்டுமானாலும் கேட்கலாம், பதில் சொல்லிவிடுவார்கள். “தம்பி, சொந்த வீடு இருக்கிறதா?” என்றால், “இருக்கு” என்பார்கள். “வாடகை வீடா, சொந்த வீடா?” “சொந்த வீடுங்க.” “பிள்ளைகள் எத்தனை?” “இரண்டு பிள்ளைகள்.” “சுகர் இருக்கிறதா?” “இருக்கு.” “பிரஷர் இருக்கிறதா?” “இல்லைங்க. சுகர் மட்டும்தான்” “எவ்வளவு?” “300 போகும்ங்க.” “நமக்கு 250 தாங்க,” என்று என்னமோ பேங்கில் டெபாசிட் பண்ண மாதிரி பேசிக்கொண்டு இருப்பார்கள்.

ஆனால், “அறிவு இருக்கிறதா?” என்று மட்டும் ஒருவரைக் கேட்டுவிடுங்கள். எவ்வளவு கோபம் வரும் தெரியுமா? “யாரைப் பார்த்து என்னடா கேட்ட நீ? ஏன்டா என்னை அப்படி கேட்டாய்?” என்று கொதித்துப் போய்விடுவார்கள். அந்த அறிவுதான் ஒரு மனிதனுக்கு மிகப் பெரிய அடையாளம், ஒரு மனிதன், மனிதனாக வாழ்வதற்கு அடையாளம் அதுதான்.

### அறிவு என்னும் ஆயுதம்

ஒரு முறை பேரரசர் அக்பர், தன்னுடைய சகாக்களை எல்லாம் அழைத்துக்கொண்டு காட்டுக்குப் போகிறார். பேரரசர் அக்பர், ‘ஒரு மனிதனைப் பாதுகாக்கும் ஆயுதத்தில் எது சிறந்த ஆயுதம்?’ என்று கேட்டவுடன் ஒருவன் “ஈட்டி” என்கிறான், இன்னொருவன் “கத்தி” என்கிறான், அப்பொழுது பீர்பால் சொல்கிறார், “ஆபத்து வரும்போது உங்களைப் பாதுகாப்பது இது எதுவுமே இல்லை; அறிவுதான்” என்கிறார்.



திண்டுக்கல் ஐ.லியோனி
கழகக் கொள்கை பரப்புச் செயலாளர்



“அறிவு எப்படி பாதுகாக்கும்?” என்று கேட்கிறார் அக்பர்.

அந்த நேரத்தில் ஒருவன் ஓடி வருகிறான். “மன்னரே. ஒரு யானைக்கு மதம் பிடித்து, ஓடி வந்துகொண்டு இருக்கிறது” என்று சொல்லவும், உடனே அக்பர் வாளை எடுத்து, “அந்த யானையை நான் குத்தப்போகிறேன்,” என்கிறார். 20 பேர் கத்தி எடுத்துக்கொண்டு, “ஆமாம் அரசே! வாளோடு யானையுடன் போராடுவோம்,” என்கிறார்கள். இன்னும் சிலர் “ஈட்டியால் யானையைத் தாக்குவோம்” என்கிறார்கள்.

பீர்பால் யோசித்தார். ஓரத்தில் கிடந்த ஒரு சின்ன பூனைக்குட்டியை எடுத்து யானையின் முதுகில் தூக்கிப் போட்டார். அந்தப் பூனைக்குட்டி கூரிய நகங்களால் யானையின் முதுகைப் பிராண்ட ஆரம்பித்துவிட்டது. யானை அப்படியே சிலிர்த்து, அந்தப் பூனையை எப்படியாவது தூக்கி எறிய வேண்டும் என்று நினைக்கிறது. தும்பிக்கை நடு முதுகுக்குப் போகவில்லை.

உடனே, அந்த யானையின் கவனம் முழுவதும் பூனைக்குப் போய்விட்டது. பூனை கீழே குதித்தது. யானை பூனையைத் துரத்திக்கொண்டு போனது. அக்பர், அந்தப் போர் வீரர்கள் எல்லாம் காப்பாற்றப்பட்டார்கள். அப்பொழுதுதான் பீர்பால் சொன்னார், ‘உங்களுடைய ஆயுதங்கள் எல்லாவற்றையும்விட ஆபத்து வரும்போது உங்களைப் பாதுகாப்பது உங்களுடைய அறிவுதான். அதனால், அறிவை ஆயுதமாகக் கொள்ளுங்கள்’ என்று சொன்னார்.

### இளைஞர்களே வாருங்கள்!

சீர்திருத்தம் செய்ய சாக்ரடீஸ் யாரைக் கூப்பிட்டார் தெரியுமா? இளைஞர்களை.

“ஏதென்ஸ் நகரின் எழில்மிக்க வாலிபர்களே! ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்! வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால், தீட்டிய வாளும் தோள்களிலே தூக்கிய ஈட்டி மட்டும் போதாது வீரர்களே! இதோ நான் தரும் அறிவாயுதத்தை ஏந்திக் கொள்ளுங்கள்!” - இது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் எழுதிய வசனம்.

### பாரதியார் யாரை அழைத்தார்?

“ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா!”
“உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா!”
“களி படைத்த மொழியினாய் வா வா வா!”
“கடுமை கொண்ட தோளினாய் வா வா வா!”
என்று இளைஞர்களைத்தான் அழைத்தார்.

பாரதிதாசனோ, “சிங்க இளைஞனே! சுடர் முகம் தூக்கு! விழி, எழு! விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை! மானுட சமுத்திரம் நான் என்று கூவு” என்று இளைஞர்களை அழைத்தார். எனவே, சாக்ரடீஸ் முதல் பாரதிதாசன் வரை சமூக மேம்பாட்டுக்காக இளைஞர்களைத்தான் அழைத்தார்கள்.

### வாய்மையால் வென்றோம்.

அண்ணா ஆட்சி அமைத்த பொழுது அண்ணாவிடம் கேட்டார்கள். “உங்கள் கட்சி வெற்றி பெற்றதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?” என்று. ஒரே வார்த்தையில் அண்ணா “வாய்மை” என்றார். “வாய்மையா?” “ஆமாம். இரண்டாகப் பிரித்துப் பாருங்கள். ‘வாய்’ ‘மை’. ‘வாய்’ என்பது பேச்சு, ‘மை’ என்பது எழுத்து. வாய் என்ற மேடைப் பேச்சாலும், மை என்ற எழுத்தாலும் கட்டப்பட்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்,” என்று அண்ணா அன்றைக்குச் சொன்னார்.

அன்றைக்கு மேடைப்பேச்சு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமே அண்ணாதான்.

அண்ணா ஒரு முறை பேசுவதற்காக, மேடைக்குப் போகிறார். அண்ணாவுக்கு முன் நாவலர் நெடுஞ்செழியன் பேசிக்கொண்டு இருக்கிறார். அப்போதெல்லாம் இந்த மாதிரி அட்ஜஸ்ட் செய்யக்கூடிய மைக் கிடையாது. மேலே பந்தலில் இருந்து ஒரு கயிற்றில் தொங்கிக்கொண்டு இருக்கும் ஒரு குண்டு மைக். அப்படித்தான் தொங்கவிட்டிருந்தார்கள். நாவலர் நெடுஞ்செழியன் உயரமாக இருப்பார். அவருக்குத் தகுந்த மாதிரி அட்ஜஸ்ட் பண்ணித் தொங்கவிட்டார்கள். அடுத்து அண்ணா போகிறார். மைக்கோ உயரத்தில் இருக்கிறது.. உடனே, பக்கத்து வீடுகளில் அன்றைக்குப் பெண்கள் சமையல் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டைகளை எல்லாம் கொண்டு வந்து வரிசையாக அடுக்கி, ஒரு கயிற்றில் கட்டி, அண்ணாவைத் தூக்கி அந்தப் பலகை மேல் நிறுத்தி, மைக்குக்கு நேராக நிறுத்தி, “பேசுங்கள் அண்ணா” என்று சொன்னவுடன், அண்ணா சொன்னார், “தொண்டர்களால் வளர்க்கப்பட்டவன் நான் என்பதற்கு இதுதான் எடுத்துக்காட்டு” என்று. அப்படி மேடையிலே பேசிப் பேசி வளர்ந்த இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் சிறுவனாக இருந்தபோது, அவரின் ஊருக்கு கிருபானந்த வாரியார் பேச வந்திருக்கிறார். அப்போது கிருபானந்த வாரியார் பேசும்போது, ‘புலால் உணவைச் சாப்பிடுவது உடலுக்கு நல்லதல்ல. தாவர உணவுதான் சிறந்தது. ஏனென்றால், ஒரு உயிரைக் கொலை செய்தால்தான் புலால் உணவு கிடைக்கும். ஆனால், தாவரத்தைக் கொலை செய்யாமலே காய்களைப் பறிக்கலாம், சாப்பிடலாம். அந்தத் தாவரம் உயிரோடு இருக்கும்’ என்றார். அப்போது ஒரு சிறுவன் கூட்டத்திலிருந்து எழுந்து ‘கீரைத்தண்டை முழுதாகப் பிடுங்கினால்தானே கீரையை நாம் சாப்பிட முடியும்? அப்போது அந்தக் கீரை செத்துத்தானே போகும்?’ என்று கேள்வி கேட்டான். அந்தச் சிறுவன் வேறு யாரும் இல்லை. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்தான்.

இப்படி பகுத்தறிவுக் கேள்விகளை முன்வைப்பதுதான் முற்போக்கு அரசியல். இளமைப் பருவத்தில் ஒரு கட்சியில் சேர்ந்து அரசியல் செய்வது அரசியல் அல்ல. சிந்தனையில் யார் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்கிறார்களோ, அவர்கள்தான் அரசியலுக்குத் தகுதியானவர்கள்.

இன்றைக்கு வள்ளுவர் கோட்டத்தில் பேசுவதற்கு, எனக்கு உண்மையிலேயே பெருமையாக இருக்கிறது. 10 ஆண்டுகள் எங்கே இருந்தது என்றுகூட அடையாளம் தெரியாமல் இருந்த இந்த வள்ளுவர் கோட்டத்தை, இன்று உலகமே புகழ்கின்ற அருமையான இடமாக மாற்றிக் காட்டிய நம் தமிழக முதல்வருக்கு நன்றி. அந்த வள்ளுவர் ‘பெரியாரைத் துணைக்கோடல்’ என்று ஓர் அதிகாரம் எழுதி இருக்கிறார். பெரியாரைத் துணையாகப் பற்றிக்கொண்டதால்தான் இப்போது தமிழ்நாடு பகுத்தறிவு மாநிலமாக விளங்குகிறது.

நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர், மக்களைத் தேடி மருத்துவம், அன்புச்சோலை என்று ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற அந்த முதல்வர், வருகின்ற 2026-ஆம் ஆண்டு நடைபெறுகின்ற தேர்தலிலும் வென்று, ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான், தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறேன்’ என்று கவர்னர் மாளிகையில் கம்பீரமாகப் பதவியேற்க வேண்டும்” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

முற்போக்கு புத்தகக்காட்சியை ஒட்டி ‘புத்தர் கலைக்குழு’வின் தப்பாட்டம் நடைபெற்றது. மகிழினியும் அவர் கணவர் மணிமாறனும் இணைந்து நடத்தும் ‘புத்தர் கலைக்குழு’ உலகம் முழுவதும் நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது. பெண்கள் பறை இசைக்கக் கூடாது என்ற மரபை உடைத்து, பெண்களும் பறை இசைக்கும் குழு ‘புத்தர் கலைக்குழு’. இந்தக் குழுவை நடத்திவரும் மகிழினி மணிமாறன், திரைப்படங்களில் பாடல்களையும் பாடியிருக்கிறார். ஆதியிசையாம் பறையிசை எழுச்சியுடன் இசைக்கப்பட்டு அறிவுத் திருவிழாவுக்குப் பெருமை சேர்த்தது.